**செம்பாக்கம் நகராட்சியில் 31.12.2020ம் நாள் வியாழக்கிழமை மாலை 5.00 மணியளவில் தனி அலுவலர் அவர்களின் தலைமையில் நடைப்பெற்ற சாதாரணகூட்டத்தின் நடவடிக்கைகளின் நகல்.**

**கலந்துக்கொண்ட தனி அலுவலர் பெயர் மற்றும் பதவி:** **திருமதி. கா. ராஜலட்சுமி**
**தனி அலுவலர் / ஆணையாளர்**
**செம்பாக்கம் நகராட்சி**

பொருள் எண்.1

செம்பாக்கம் நகராட்சி ஆணையர் அவர்களின் டிசம்பர் 2020 மாதத்திய நாட்குறிப்பேட்டினை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.734** **பதிவு செய்யப்பட்டது.**

பொருள் எண்.2

மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற நீதிப்பேராணை 31941/2018ன் 4.4.2019ம் தேதிய உத்திரவின் அடிப்படையில், 2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சி சட்டங்கள் (ஐந்தாவது திருத்தம்) சட்டத்தினால் (தமிழ்நாடு சட்டம் 40/2018) திருத்தம் செய்யப்பட்ட அட்டவணை V–ல் உள்ள உட்பிரிவு (jj) மற்றும் (jjj)–ல் குறித்துரைக்கப்பட்டுள்ள நோக்கங்களுக்காக 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் V/1920) பிரிவு 249–ன் படி முடித்திருத்தகம் / அழகுநிலையம் / ஸ்பா / மசாஜ் நிலையம் நடத்துவோர் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளில் தவறாமல் உரிமம் பெற்று நடத்திட சட்ட திருத்தம் செய்து தமிழ்நாடு அரசிதழ் எண்.38 நாள் 31.1.2019ல் வெளியிடப்பட்டுள்ளது.

மேலும் இந்த சட்ட திருத்த வெளியீட்டினை அடிப்படையாக கொண்டு, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை 28 அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.19775/ஜெ2/2019–3, நாள் 15.12.2020ல் முடித்திருத்தகம் / அழகுநிலையம் / ஸ்பா / மசாஜ் நிலையம் நடத்துவோர் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளில் தொழில் உரிமம் பெறுவதற்கு நாளிதழில் அறிவிப்பு பிரசுரம் செய்து நடைமுறைப்படுத்தவும் தெரிவிக்கப்பட்டது.

அதன் அடிப்படையில் செம்பாக்கம் நகராட்சி எல்லைக்குட்பட்ட இடங்களில் முடித்திருத்தகம் / அழகுநிலையம் / ஸ்பா / மசாஜ் நிலையம் நடத்துவோர் இந்நகராட்சியில் விண்ணப்பம் சமர்பித்து தொழில் உரிமம் பெற்றுக் கொள்ளவும், தவறும் பட்சத்தில் தொழில், உரிமம் இன்றி செயல்படுவதாக கருதி நிலையம் நடத்துவோரும், நிலைய உரிமையாளரும் பொறுப்பானவராக கருதி நிலையத்தை மூடி முத்திரையிடுதல், உள்ளிட்ட அனைத்து சட்ட பூர்வ நடவடிக்கைகளையும் மேற்கொள்ள தமிழ்நாடு சட்டம் V/1920–ன் கீழ் மேற்கொள்ளப்படும் என நாளிதழிலில் அறிவிப்பு செய்யவும், அதற்கான தோராய செலவினம் ரூ.30000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** இந்த அறிவிப்பினை (தமிழ் மற்றும் ஆங்கிலம்) நாளிதழில் விளம்பரம் பிரசுரம் செய்வதற்கான கட்டணத் தொகை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.735 அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.3**

செம்பாக்கம் நகராட்சியில் 2020–21 மற்றும் 2021–22 ஆகிய ஆண்டுகளுக்கு பொது நிதியின் கீழ் 4.12.2020ம் தேதியன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பார்வைக்கும்.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ. லட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி விவரம் | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | செம்பாக்கம் நகராட்சியின் பராமரிப்பில் உள்ள 12 எண்ணிக்கையிலான பூங்காக்களை காவல் பணிக்காக தேவைப்படும் பணியாட்களை சப்ளை செய்தல் பணி | 9.80 | ஆர். சுஜாதா | மதிப்பீட்டை விட 0.25% குறைவு |
| | | | கே. கிருஷ்ண மூர்த்தி | மதிப்பீட்டை விட 1.90% அதிகம் |

**அலுவலக குறிப்பு:**

1. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று, பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

**தீர்மான எண்.736 அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.4**

செம்பாக்கம் நகராட்சிக்கு சொந்தமான இன்னோவா வாகனம் எண். TN 11 D 2013ல் காலமுறை பராமரிப்பு பணி மற்றும் புதிய உருளைகள் நான்கு எண்ணிக்கை மாற்றம் செய்தல் பணி ஆகிய பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள தயாரிப்பு நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட லான்சன் மோட்டார்ஸ் பிரைவேட் லிட், பள்ளிக்கரணை நிறுவனத்திடம் வாகனத்தை ஒப்படைத்து பணி செய்து முடிக்கவும், அதற்கான தோராய மதிப்பீட்டு தொகை ரூ.34000/–க்கு மன்றத்தின் அனுமதி வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கியமைக்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

**தீர்மான எண்.737 அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.5**

செம்பாக்கம் நகராட்சிக்கு சொந்தமான போலிரோ வாகனம் எண். TN 11 AK 6142ல் காலமுறை பராமரிப்பு பணி மேற்கொள்ள தயாரிப்பு நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட இந்தியா கேரேஜ், சிட்லபாக்கம், சென்னை 64 நிறுவனத்திடம் வாகனத்தை ஒப்படைத்து பணி செய்து முடிக்கவும், அதற்கான தோரய மதிப்பீட்டு தொகை ரூ.20000/–க்கு மன்றத்தின் அனுமதி வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கியமைக்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

**தீர்மான எண்.738** **அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.6**

செம்பாக்கம் நகராட்சியின் பொது சுகாதார பிரிவின் கீழ் கீழ்காணும் கொசு ஒழிப்பு இயந்திரங்கள் பயன்பாட்டில் உள்ளது.

| | |
|---|---|
| Pulse Fogging Machines | 4 Nos |
| Vehicle Mount Fogging Machine | 1 No |

பருவமழை காரணமாக டெங்கு, மலேரியா, யாணைக்கால் வியாதி மற்றும் பூச்சிகளால் தொற்று நோய்கள் பரவாமல் தடுப்பதற்கு இவ்வியந்திரங்கள் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், பயன்பாட்டில் உள்ள ஒரு Vehicle Mount Fogging Machine வாகனத்தில் வைத்து இயக்கும் கொசு ஒழிப்பு இயந்திரம் ஜனவரி 2016 (2016–17) நிதியாண்டில் கொள்முதல் செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது. இவ்வியந்திரத்தில் அவ்வப்பொழுது பழுது ஏற்பட்டு கொசு ஒழிப்பு பணிகளில் தொய்வு ஏற்படுகிறது. மேலும், இவ்யந்திரத்தினை கொண்டு அனைத்து 15 வார்டு பகுதிகளின் முக்கிய பிரதான சாலைகளில் பயன்படுத்த இயலாத சூழ்நிலை உள்ளது.

எனவே, கொசு ஒழிப்பு பணியினை தொடர்ந்து துரிதமாக மேற்கொள்ளவும், பொது மக்களின் நலன் கருதி இப்பணிக்கு ஒரு Vehicle Mount Fogging Machine வாகனத்தில் வைத்து இயக்கும் கொசு ஒழிப்பு இயந்திரத்தினை கொள்முதல் செய்வது அவசியமாகிறது. மேலும் இயந்திரம் கொள்முதல் செய்வதற்கான தோராய மதிப்பீட்டினை உள்ளூர் இயந்திர சப்ளை செய்யும் நிறுவனங்களிடமிருந்து கோரிய வகையில் தோராய மதிப்பீட்டு தொகை ரூ.6.00 இலட்சம் ஆகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், இவ்வியத்திரத்தினை ஒப்பந்தப்புள்ளிகள் கோரி கொள்முதல் செய்யவும், இச்செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | விவரம் | மதிப்பீடு தொகை |
|---|---|---|
| 1 | **Vehicle Mount Fogging Machine - 1 No**<br>Petrol Tank Capacity: 5 Lrs<br>Formulation Tank Capacity: 50 Ltrs<br>Engine Type: 2.8 HP, 3600 RPM<br>Fog Particle Size: 0-60 Microns<br>Area Coverage: 75-85 Hectares<br>Spark Plug: Electronic Ac/DC Micro W175z<br>Overall Dimension: Length:1200 mm | ரூ.6.00 இலட்சம் |

| | | |
|---|---|---|
| | Width 900 mm<br>Height 750 mm<br>Weight of the Machine: 125 Kgs Approx | |

**அலுவலக குறிப்பு:** செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.739 அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.7**

செம்பாக்கம் நகராட்சியில் 2019-2020ம் ஆண்டிற்கான உள்ளாட்சி நிதி தணிக்கை நடைபெற உள்ளதால், ஆண்டு கணக்குகள் கணனியில் தொகுத்து உரிய படிவங்களில் பூர்த்தி செய்து உதவி இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறை, காஞ்சிபுரம் அவர்களுக்கு உடன் சமர்ப்பிக்க வேண்டியுள்ளதால், இப்பணிகளை செய்யும் நிறுவனங்களிடமிருந்து அவசர அவசியம் கருதி உள்ளூர் விலைப்புள்ளி கோரிய வகையில் கீழ்காணும் விவரப்படியாக விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ. எண் | விவரம் | ஜி சாப்ட் சிஸ்டம்<br>நெ.2/1, 2வது தளம்<br>ஜோதி நகர் மெயின் ரோடு,<br>ஈக்காட்டுதாங்கல்,<br>சென்னை – 32 | கர்சர் சொலியூசன்<br>நெ. 30/4, எல்லையம்மன் கோயில் தெரு,<br>வண்ணாந்துரை,<br>அடையார், சென்னை -20 |
|---|---|---|---|
| 1 | 1. Preparation of Journal Book Data Entry Charges<br>2. Preparation of General Ledger Data Entry Charges<br>3. Preparation of Trial Balance Sheet Data Entry Charges | Rs.1,50,000/- | Rs.1,51,500/- |
| | விலைப்புள்ளி விகிதம் | குறைவு | அதிகம் |

மேற்காணும் இரண்டு நிறுவனங்களிடமிருந்து வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் மெஸ்ஸர்ஸ் ஜி.சாப்ட் நிறுவனத்தின் விலைப்புள்ளி குறைவாக உள்ளது. குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள நிறுவனம் மூலம் ஆண்டு கணக்குகள் தயாரிக்கும் பணியினை மேற்கொள்ளவும், பணி உத்திரவு வழங்கி நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. மேலும் இதற்கான தோராய செலவினம் ரூ.1.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** இச்செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.740 அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.8**

செம்பாக்கம் நகராட்சி பொது சுகாதார பிரிவு 2020–21ம் ஆண்டு பொது நிதியின் கீழ் 29.12.2020ம் தேதியன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பார்வைக்கும்.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ. லட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி விவரம் | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | **Supply, Delivery and Fixing of Vehicle Mount Fogging Machine - 1 No**<br><br>Petrol Tank Capacity: 5 Lrs<br>Formulation Tank Capacity: 50 Ltrs<br>Engine Type: 2.8 HP, 3600 RPM<br>Fog Particle Size: 0-60 Microns<br>Area Coverage: 75-85 Hectares<br>Spark Plug: Electronic Ac/DC Micro W175z<br>Overall Dimension: Length:1200 mm<br>Width 900 mm<br>Height 750 mm<br>Weight of the Machine: 125 Kgs Approx | 6.00 | Karthiga Systems Engineering T191, Kattapomman Street, Pari Nagar, Ashok Nagar, Chennai 83 | மதிப்பீட்டை விட 0.16% குறைவு |
| | | | Nadi Enterprises No.14/13, New Colony Main Road, West Saidapet, Chennai 15. | மதிப்பீட்டை விட 8.33% அதிகம் |

அலுவலக குறிப்பு:

1. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று, பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

**தீர்மான எண்.741** **அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.9**

தமிழக அரசு மூலம் கொரோனா தொற்று தடுப்பு நடவடிக்கைகளின் கீழ் 144 தடை உத்திரவி பிறப்பிக்கப்பட்டு செயல்பாட்டில் உள்ளதால், அவசர அவசியம் கருதி இந்நகராட்சியில் 1920ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்ட பிரிவு 15ன் கீழ் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் விவரம் மற்றும் செலவினத் தொகை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விவரம் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | செம்பாக்கம் நகராட்சி பகுதியில் வார்டு வாரியாக 1.10.2020 முதல் 31.10.2020 வரையான காலத்திற்கு இரு எண்ணிக்கையிலான டாடா ஏஸி வாகனத்தில் 2000லிட்டர் கொள்ளளவு கொண்ட தண்ணீர் தொட்டி, உயர் அழுத்த மோட்டாருடன் கூடிய ஸ்பேரயர், வண்டி வாடகை, டீசல், இரண்டு நபர்களுக்கான நாள் ஊதியம், ஓட்டுநர் ஊதியம், படிகள் மற்றும் இதர செலவுகள் உட்பட வாடகை தொகை ஒப்பந்ததாரர் திரு. கே. ராமதாஸ் க்கு வழங்கியது | 694400 |

| | | |
|---|---|---|
| 2 | நகராட்சிக்குட்பட்ட பகுதியில் கொரோணா நோய் தொற்று ஏற்பட்ட குடியிருப்பு கட்டிடங்களிலிருந்து வெளியேறாத வகையில் தடுப்பு வேலி அமைத்தல் பணி மேற்கொண்ட வகையில் ஒப்பந்ததாரர் மெஸ்ஸர்ஸ் அருணாச்சலம் இன்பிராஸ்ட்ரக்ஷர் டெவலப்மன்ட் நிறுவனத்திற்கு வழங்கியது. (அளவு புத்தகம் எண்.46/20–21) | 652914 |
| 3 | கொரோனா நோய் தொற்று தடுப்பு நடவடிக்கைகளின் கீழ் பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்திடவும், களப்பணிக்கு தேவையான புள்ளி விவர சேகரிப்பு படிவங்கள், போஸ்டர்கள், பேனர்கள் அச்சிட்டு சப்ளை செய்தமைக்கு ஸ்ரீ கிருஷ்ணா பிரிண்டர்ஸ்க்கு வழங்கியது. | 64000 |
| 4 | செம்பாக்கம் நகராட்சி பகுதியில் வார்டு வாரியாக 1.10.2020 முதல் 31.10.2020 வரையான காலத்திற்கு பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த ஆட்டோ மைக் செட் மூலம் விளம்பரம் செய்தது வண்டி வாடகை, எரிபொருள், படிகள் மற்றும் இதர செலவுகள் உட்பட வாடகை தொகை ஒப்பந்ததாரர் திரு. கே. ராம்தாஸ் வழங்கியது | 55800 |
| 5 | கொரோனா நோய் தொற்று தடுப்பு நடவடிக்கைகளின் கீழ் இந்நகராட்சி பகுதியில் உள்ள முக்கிய பிரதான சாலைகளில் பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்திட நிகழ்ச்சிகள் நடத்திய பரணி ஸ்டேஜ் எனும் நாடக குழுவிற்கு வழங்கியது. | 20000 |
| 6 | அம்மா உணவகத்தில் இட்லி குக்கர் பழுது நீக்கம் செய்தது மற்றும் அலுவலக பயன்பாட்டில் உள்ள குளிர்சாதன அமைப்புகள் பழுது நீக்கம் செய்த வகையில் ஒப்பந்ததாரர் திரு. கே. ராமதாஸ்க்கு வழங்கியது | 59325 |
| 7 | செம்பாக்கம் நகராட்சியில் கொரோனா நோய் தொற்று தடுப்பு நடவடிக்கைகளின் கீழ் தேவையான கிருமி நாசினிகள் மற்றும் தளவாட பொருட்கள் சப்ளை செய்த ஒப்பந்ததாரர் திரு. கே. ராமதாஸ் க்கு வழங்கியது | 722160 |
| 8 | செம்பாக்கம் நகராட்சி பகுதியில் வார்டு வாரியாக 1.11.2020 முதல் 30.11.2020 வரையான காலத்திற்கு இரு எண்ணிக்கையிலான டாடா ஏஸி வாகனத்தில் 2000லிட்டர் கொள்ளளவு கொண்ட தண்ணீர் தொட்டி, உயர் அழுத்த மோட்டாருடன் கூடிய ஸ்பேரயர், வண்டி வாடகை, டீசல், இரண்டு நபர்களுக்கான நாள் ஊதியம், ஓட்டுநர் ஊதியம், படிகள் மற்றும் இதர செலவுகள் உட்பட வாடகை தொகை ஒப்பந்ததாரர் திரு. கே. ராமதாஸ் க்கு வழங்கியது | 515200 |

அலுவலக குறிப்பு: அவசர அவசியம் கருதி 1920ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்ட பிரிவு 15ன் கீழ் மேற்கொள்ளப்பட்ட செலவினங்களுக்கு மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

தீர்மான எண்.742 செலவினங்கள் பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.

பொருள் எண்.10

செம்பாக்கம் நகராட்சியின் பராமரிப்பில் உள்ள கீழ் கீழ்காணும் வாகனத்திற்கு 2020-21ம் நிதியாண்டிற்கு வாகன காப்பீடு புதுப்பிக்க வேண்டி புதுப்பித்தல் பிரிமியத் தொகை செலுத்த கோரி தி நியு இந்தியா அசூரன்ஸ் கம்பெனி லிட் நிறுவனத்திடமிருந்து கேட்பு பட்டியல் வரப்பெற்றுள்ளது மன்றத்தின் பார்வைக்கு.

| வ.எண் | வாகன பதிவு எண். | காப்பீடு முடிவு தேதி | புதுப்பித்தல் பிரிமியத் தொகை |
|---|---|---|---|
| 1 | TN11 AK 6142 | 23.1.2020 | ரூ.26474 |

அலுவலக குறிப்பு:

1. வாகனத்திற்கான புதுப்பித்தல் பிரிமியத் தொகை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து செலுத்த மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று புதுப்பித்தல் பிரிமியத் தொகை செலுத்தியமைக்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

**தீர்மான எண்.743** அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது

**பொருள் எண்.11**

செம்பாக்கம் நகராட்சியின் பராமரிப்பில் உள்ள மினி லாரி பதிவு எண். TN22 AZ 1346–ன் மின் கலன் பழுதடைந்து விட்டதால் வாகனத்தை இயக்க முடியாமல் உள்ளது. இதன் காரணமாக இரண்டாம் நிலை குப்பை சேகரிக்கும் பணி மேற்கொள்வதில் தடை எற்படுகிறது. மேலும் பருவமழையின் காரணமாக அவ்வப்பொழுது ஏற்படும் புகார்களை உடனுக்குடன் நிவர்த்தி செய்ய இயலாத சூர்நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே, பொது மக்களின் நலன் கருதியும், தற்போது கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டு வருவதாலும், மத்திய மற்றும் மாநில அரசுகளின் மூலம் அறிவிக்கப்பட்ட பொது ஊரடங்கு உத்திரவினை தொடர்ந்து, ஒப்பந்தப்புள்ளிகள் கோரி செயல்படுத்த இயலாத சூழ்நிலையில், அவசர அவசியம் கருதி அங்கீகரிக்கப்பட்ட நேரடி விற்பனையாளர் / விநியோகஸ்தர்கள் ஆகியோரிடமிருந்து விலைப்புள்ளிகள் பெற்று மேற்கொள்ளவும், இதற்கான உத்தேச செலவினம் ரூ.10,000/–க்கு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. இச்செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. உற்பத்தி செய்யும் நிறுவனங்களின் நேரடி விற்பனையாளர் / விநியோகஸ்தர்கள் ஆகியோரிடமிருந்து விலைப்பட்டியல் பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.744** அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

**பொருள் எண்.12**

நகராட்சிகள் நிர்வாக ஆணையர், சென்னை 28 அவர்களின் கடிதம் நக..எண்.21976/2020/இ2 நாள் 10.12.2020ன் படி மாநில பேரிடர் மேலாண்மை நிவர் புயல் மற்றும் தொடர் மழை 2020 மான்ய திட்டத்தின் கீழ் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் மழை நீரினால் பழுதடைந்த சாலைகளை உடனடியாக பழுது நீக்கம் செய்வதற்கு ரூ.10.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில், இந்நகராட்சி எல்லைகுட்பட்ட அனைத்து வார்டு பகுதிகளிலும் நிவர் புயல் மற்றும் தொடர் மழையின் காரணமாக மிகவும் பழுதடைந்த சாலைகளை பழுது நீக்கம் செய்வதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. லட்சத்தில் |
|---|---|---|
| 1 | மாநில பேரிடர் மேலாண்மை – நிவர் புயல் நிவாரண மாண்ய திட்டம்<br>மழையின் காரணமாக ஆங்காங்கு சாலைகளில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சீரமைத்தல் பணி | 10.00 |

**அலுவலக குறிப்பு:** மதிப்பீட்டை பார்வையிட்டு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.745** அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

தனி அலுவலர்
செம்பாக்கம் நகராட்சி